observatoire suisse du droit d'asile et des étrangers
schweizerische beobachtungsstelle für asyl- und ausländerrecht
osservatorio svizzero sul diritto d'asilo e degli stranieri

# வழக்கு ஆவணங்கள் - தகவல் தாள்

*சுவிஸ் தஞ்சம் மற்றும் குடிவரவு சட்ட ஆய்வகம்* (SBAA: Schweizerische Beobachtungsstelle für Asyl- und Ausländerrecht) *என்பது அகதிகள் மற்றும் புலம்பெயர்ந்தோரின் உரிமைகளுக்காக போராடும் சுயாதீனமான ஒரு அமைப்பாகும்.*

## உங்கள் அனுபவங்களில் நாங்கள் ஏன் ஆர்வம் காட்டுகிறோம்?

*அகதிகள் மற்றும் புலம்பெயர்ந்தோர் சுவிட்சர்லாந்தில் பல்வேறு நடைமுறைகள்* (*புகலிட நடைமுறைகள், குடும்ப ஒருங்கிணைப்பு போன்றவை*) *வழியாக செல்கின்றனர். இவை பெரும்பாலும் சிக்கலானவை. எப்போதும் நியாயமானவை அல்ல. நடைமுறைகளின் போக்கில் புலம்பெயர்ந்தோர் மற்றும் அகதிகள் பெறும் அனுபவங்களில் நாங்கள் ஆர்வமாக உள்ளோம். நாங்கள் அவர்களின் அறிக்கைகளை சேகரித்து, வழக்கு ஆவணங்களை தொகுத்து வெளியிடுகிறோம். நாங்கள் அரசியல்வாதிகள், ஊடகவியலாளர்கள் மற்றும் நிபுணர்களுக்கு அறிவித்து, சட்ட முடிவுகளில் இருக்கும் பிரச்சினைகள் குறித்து அவர்களின் கவனத்தை ஈர்க்கிறோம். சுவிட்சர்லாந்தில் குடியேறியவர்கள் மற்றும் அகதிகளுக்கான நிலைமையை நாம் ஒன்றிணைந்து மேம்படுத்த முடியும்.*

## நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியதும் மற்றும் செய்யவேண்டியதும் என்ன?

***உங்கள் வழக்கின் ஆவணங்கள் மற்றும் வெளியீடு இரகசியமானது***

- *உங்கள் பாதுகாப்பிற்காக பெயர் மற்றும் வயது மாற்றப்படும்.*
- *முகவரி மற்றும் வசிக்கும் இடம் வெளியிடப்படமாட்டாது.*

***உங்கள் அனுபவங்களை ஆவணப்படுத்த, எங்களுக்கு முடிந்தவரை அனைத்து ஆவணங்களும் தேவை***

- *இந்த ஆவணங்கள் யாருக்கும் வெளியிடப்படமாட்டாது.*

***இணைக்கப்பட்ட ஒப்புதல் படிவத்தில் கையொப்பமிடுவதன் மூலம், நீங்கள் கீழ்வரும் விடயங்களுக்கு ஒப்புதல் அளிக்கிறீர்கள் ...***

- *... உங்கள் வழக்கை பிரதிநிதித்துவம் செய்பவர்கள் உங்களைப் பற்றிய அனைத்து ஆவணங்களையும் எங்களுக்கு அனுப்புவார்கள்.*
- *... உங்கள் அறிக்கையில் உங்கள் பெயர் அல்லது வசிக்கும் இடம் குறிப்பிடாமல் வெளியிடுவோம்.*

***நீங்களும் உங்கள் சட்ட வழக்கை பிரதிநிதித்துவம் செய்பவர்களும் ஒப்புக்கொண்டால் மட்டுமே, நாங்கள் உங்கள் அனுபவங்களை எழுதி வெளியிடுவோம்.***

***நாங்கள் ஒரு ஆலோசனைமையமும் அல்ல, நாங்கள் வழக்கறிஞர்களும் அல்ல. உங்கள் ஆலோசனைக்கு, உங்கள் சட்ட பிரதிநிதித்துவத்தை நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டும்.***

**தொடர்பு விவரம்**
Swiss Asylum and Aliens Law Observatory (SBAA)
Hallerstrasse 58
3012 Bern
Tel. 031 381 45 40
dokumentation@beobachtungsstelle.ch
www.beobachtungsstelle.ch